மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கொடுத்திருக்கிற கெயில் நிறுவனம் குழாய்கள் பதிக்கும் பிரச்சினை சம்பந்தமாக துறையிடமிருந்து பதில் கேட்டிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். சேலம் இரும்பாலை பிரச்சினைக் குறித்த தீர்மானத்தை இன்று காலையில் 9-40 மணிக்குத்தான் என்னிடம் கொண்டுவந்து கொடுத்துள்ளீர்கள். அதற்கும் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன்.*

(ஆ) 27-7-2016 அன்றைய பேரவை நடவடிக்கைக் குறிப்பில் சில பகுதிகளை நீக்குதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற சமயத்திலே, தங்களுடைய தீர்ப்பை அவைக் குறிப்பைப் படித்துவிட்டு வழங்குவதாகச் சொன்னீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான்தான் தீர்ப்பு சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேனே! அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) தீர்ப்பைச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன், பேசாமல் இருங்கள்.*

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–
தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே பெண்கள் எளிதாக உயர் கல்வி பெற முன்னுரிமை அளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடையநல்லூரிலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான அரசுக் கல்லூரியை ஊருக்கு வெளியே, வனப் பகுதிக்கு மாற்றுவதைத் தவிர்த்து, நகர எல்லையிலே இருக்கும் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கூட வளாகத்திலேயே அமைத்து, பெண்கள் எளிதாக உயர் கல்வி பெற அரசு உதவிட மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனிக் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*